# கிறிஸ்து தத்துவம்



கவிஞர் வாகரைவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து தத்துவம்

கவிஞர் வாகரைவாணன்

அச்சுப்பதிப்பு :

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : புரட்டாதி 1991

உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : 9

விலை : ரூபா 25-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் குரவர் - ஆர். எச். சகாயநாயகம்
அவர்கள்
( இயக்குநர், மறைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணம் )

# வாழ்த்துகின்றார்

இயேசுவின் போதனைகள் - தத்துவங்கள் - நம் வாழ்விற்கு இன்றியமையாதவை. கவர்ச்சிகரமாகவும் எளிய நடையிலும் அமையும் தத்துவங்கள் இலகுவாக மனதில் பதிகின்றன. இந்தவகையில் - எக்காலத்திற்கும் தேவையான கிறிஸ்துவின் போதனைகளை - சாதாரண வாழ்க்கையே தடம்புரண்டு விட்ட இக்காலத்தில் மக்கள் முன் வைத்த கவிஞர் வாகரைவாணன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

அவர் நம் வாழ்விற்கு அடிப்படையான கிறிஸ்துவின் தத்துவங்களை 'கிறிஸ்து தத்துவம்' எனும் பெயரிலும், 'கிறிஸ்துவின் புகழ்' எனும் தலைப்பில் உலகெலாம் போற்றும் யேசுபரன் பெருமையையும் - கவிதை நடையில் ஒரே நூலாகத் தந்துள்ளார்.

கவிஞர் வெளியிடும் இக்கவிதை நூல் மகத்தான வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இவரது முயற்சி சிறக்க உளமார வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தேன்; சுவைத்தேன்

**தவத்திரு. பி. ஜேசுநேசன், O. M. I.**
(துணைமுதல்வர், புனித. பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்)

கவிஞர் வாகரைவாணன் எழுதிய 'கிறிஸ்து தத்துவம்' எனும் புதுக்கவிதை நூலைப்படித்தேன்; சுவைத்தேன்.

விவிலியத்தைப் பலர் படம்பிடிக்க முயற்சி செய்கிறார்கள். அதுவும் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பலகோணங்களில் பார்த்து, ஆராய்ந்து நிற்பவர்களின் பட்டியல் ஏராளம்.

இந்த வரிசையில் கவிஞர் வாகரைவாணனின் பார்வை தனிச்சிறப்புப்பெற்றது. 'என் பெயர் யேசு'...... எனத் தொடங்கி 'அல்லேலூயா' என்றுமுடிவடையும் இக்கவிதை மலர் என்னைத் தொட்டு நிற்கிறது.

அவதாரம், மறைந்தவாழ்வு, போதனை, மரணம், உயிர்ப்பு எனும் பகுதிகளைக்கொண்ட கிறிஸ்து யேசுவின் வாழ்க்கையை எளியநடையில் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் வகையில் கவிதையாக்கித் தந்திருக்கும் கவிஞர் அவர்களை நான் பாராட்டி மகிழும் அதேநேரத்தில் இக்கவிதை நூலினைப் படிப்பதனால் பலரும் அருள்வாழ்வு பெற வேண்டுமென ஆசிக்கின்றேன்.

இதுபோன்ற கிறிஸ்தவ தமிழ் இலக்கிய மலர்களை நம் கிறிஸ்தவ சமுதாயம் வரவேற்று ஆதரவு தருவதோடு இத் துறையில் உழைக்கும் வாகரைவாணனின் வாரிசுகளையும் இனம்கண்டு மகிழவேண்டுமென்றும் விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்...

கடவுளின் கையில் நான் ஒரு கருவி என்பதையே இந்தக் கவிதைநூல் எனக்கு எடுத்துச் சொல்கிறது.

இதில் — என்னுடையதென்று எதுவுமில்லை. தமிழ் கூட '' அவன் '' தந்ததே. அதைத் தக்கவிதத்தில் நான் பயன்படுத்தியிருக்கிறேனென்றால் — அதற்கும் ' அவன் ' அருள் வெள்ளம் தான் அடிப்படை.

' கிறிஸ்து தத்துவம் '' கிழக்கு ஐரோப்பாவிலும் கேட்கப்படும் நேரம் இது. ' ஆசியஜோதி' யாகவும், அவனே ஒளிவீசும் காலம் அண்மித்து விட்டது.

இச் சந்தர்ப்பத்திலேயே, இக்கவிதை நூல் வெளிவருகின்றது. கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய உலகில் இது ஒரு புது முயற்சி என்றே நான் கருதுகின்றேன். வரவேற்று ஆதரவளிப்பது வாசகப் பெருமக்களாகிய உங்களின் கடமை.

கையெழுத்துப் பிரதியாகவிருந்த இக்கவிதை இலக்கியத்திற்கு, ஏடு எனும் அரியாசனத்தை ஈந்தவர் தவத்திரு ஜி. ஏ. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் (முதல்வர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களே. என்னால் என்றுமே மறக்க முடியாத அரும்பெரும் உதவி இது. மனம் நிறைந்த நன்றி அந்த மாதவச் செல்வருக்கு,

எனது எழுத்தைப் படித்து — இனியதோர் வாழ்த்துரையும், ஏற்றதோர் மதிப்புரையும் வழங்கியருளிய தவத்திரு ஆர். எச். சகாய நாயகம் அடிகளார், தவத்திரு பி. ஜேசுநேசன் அடிகளார்—இருவருக்கும் என் இதயம்கனிந்த நன்றி. இறுதியாக —

கிறிஸ்துவேதம் எங்கெங்கும் கேட்டிடவேண்டும்; கிழக்கிலும், மேற்கிலும் அவர்தம் புகழ் நிறைந்திட வேண்டும்— என்னும் என் ஆசையின் வெளிப்பாடே இச்சிறு நூல் என்று சொல்லிக் கொள்வதில் உண்மையிலேயே நான் பெருமைப் படுகின்றேன்.

அன்பன்
வாகரைவாணன்

' பழனம் '
உடுவில் தெற்கு, உடுவில்.
19-9-1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து தத்துவத்தை எனக்கு அறிவித்த

ஆயர்

அருட் பெருந் திரு.

# இக்னேஷியஸ் கிளெனி, சே. ச.

ஆண்டகை

அவர்களின்

# நினைவுக்கு

## இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து தத்துவம்

என் பெயர்
இயேசு

தாய் மரியாள்
தந்தை சூசை
தாவீது பரம்பரை.

பிறந்த இடம்
பெத்தலேகம்
பலஸ்தீனத்தின்
ஒரு
பழைய கிராமம்.

மண்ணில் பூத்த
மனித மலர்களில்
நானும் ஒருவன்
ஆயினும் -
விண்ணகமே
எனது வீடு.

இரவில்
நான் மலர்ந்தபோது
நல்ல இருட்டு,
ஒரே ஒரு
வெள்ளி மட்டுமே
எனக்காக
ஓடி வந்தது.

மண்ணைத் தான்
நான் இன்னும்
மனமார
நேசிக்கின்றேன்.

கடவுட் தன்மை
பெற்ற
மனிதர்கள் வாழும்
கைலாயம்
அல்லவா, இது!

இது மட்டுமா?

பலஸ்தீனத்தின்
பாலை வெளிகளையும்
பாறைகளையும்
படகிலே
வலம் வந்த
ஏரிகளையும்
என்னால் எப்படி
மறக்கமுடியும்?

சின்னவயதிலேயே
சிந்திக்கத்
தொடங்கியவன் நான்
என்னைச் சூழ இருந்த
உலகத்தைப்
பார்த்தபோது
எனக்கு
என்னவோ போலிருந்தது!

அனைத்துப்
பணிகளுக்கும்
என்னை
ஆயத்தம் செய்தவன்
என் அன்னையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பொறுத்தவரை
வாழ்க்கை
ஒரு போராட்டம்!

பாடுகள்
என் பக்கத்திலேயே
இருந்தன.

ஏழ்மையும் நானும்
இரட்டைப் பிறவிகள்

நரிகளையும்
பறவைகளையும்
பார்த்து,
நான்
பொறாமைப்பட்டதுண்டு,

துயரம்
என் தோளிலேயே
தொத்திக் கொண்டிருந்தது

சந்தோஷம்
என்னைச்
சந்தித்ததுண்டு.
அது
சிலசமயம்
சத்தியாக்கிரகம்
செய்ததுமுண்டு.

தரித்திரம் தான்
என் தலையணை.

பிறப்பிலிருந்து
இறப்புவரை
என்னால்
இதனைப்
பிரியவே முடியவில்லை.

இள வயதில்
என் கைத்தாதையை
இழந்த நான்
நிழல் இன்றித்
தவித்த
என் நேசத் தாயை
விட்டு விட்டு
உங்களைத்
தேடித்தான்
ஓடி வந்தேன்.

தொண்டு செய்யப்
புறப்படும் போது
பாசங்கள்
தொடரக் கூடாது
இல்லையா?

'புத்தகப்
படிப்பாளிகளை' நம்பி
நான் என்
பொதுப்பணியை
ஆரம்பிக்கவில்லை.

நாலு புத்தகங்களைப்
படித்த 'ஞானிகளை'
ஒதுக்கி விட்டு
எழுத்தறிவில்லாத
இராயப்பனைத்தான்
என் சீடனாகத்
தெரிந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை
அனுபவத்திலிருந்து
வடிந்தொழுகும்
சாறுதானே ஞானம்!

இந்த ஞானம்
என் சீடர்களிடம்
நிறையவே இருந்தது.

நான் யாரென்று
ஞானிகளுக்குத் தான்
தெரியும்.

பெத்தலேகமில்
நான் பிறந்த போதே
இந்தப் பேருண்மை
தெரிந்து விட்டது-

சத்திரங்களும்
குடிசைகளும் தான்
சரித்திரத்தை
உண்டாக்கும்
என்பதற்கு
நானும் ஒரு சான்று.

சரித்திரத்தை
இரண்டாக்கும் சக்தி
என் பிறப்புக்கே
இருந்தது.

உரோமைப் பேரரசு
என்னை
உதாசினம் செய்தது.
அது ஒரு காலம்!

இன்று அந்த
உரோமையில் தான்
என் இருக்கையே
இருக்கிறது.

உலகம் முழுவதும்
எனது கொடியே
உயரப் பறக்கப்
போகின்றது!

கிறிஸ்து எனது
வேதத்தை
கிழக்கும்
ஏற்கும் காலம்
விரைவில் வரும்.

நம்புங்கள்
நல்லது நடக்கும்.

எனக்கு முன்பும்
ஞானிகள் பலர்
இருந்தார்கள்.

அவர்களூடாக
நான், உங்களோடு
அளவளாவினேன்.

இசையாஸ்
எரேமியாஸ்
இவர்களெல்லாம்
என் நாக்குகள்

காலத்திற் கேற்றபடி
கருவிகள் மாற்றப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தினுள்ளும்
ஊடுருவியிருப்பவன்
நான் என்பதை
மறந்து விட்டு
இது அறிவியல் யுகம்
என்று நீங்கள்
ஆர்ப்பாட்டம்
செய்வதில்
என்ன அர்த்தம்
இருக்கிறது.

அணுவை ஆயிரமாய்ப்
பிளந்தாலும்
அதற்குள்ளே
இருப்பவன் நான்.

சூத்திரதாரி நானே.
நீங்கள்
சுழலும் பொம்மைகள்.

காலம்
எனது கைக்குள்

உலகத்தை
உருளச்
செய்பவன் நானே,

எனது சுட்டுவிரலின்
அசைவிலேயே
நட்சத்திரங்களும்
கோள்களும்
இயங்குகின்றன.

நில் என்றால்
அனைத்தும் நிற்கும்

நீங்கள் பூஜ்ஜியம்
அதற்குள் இருந்து
இராச்சியத்தை
நடத்துபவன் நான்.

வானில் இருந்து
வந்தவன் நான்

தந்தையும்
நானும் ஒன்று.
இதில்
விந்தை இல்லை
விளங்கிக் கொண்டால்.

ஆனால்-

விளங்க முற்படுவது
வீண்
விவேகி அகுஸ்தீனே
வீழ்ந்து போனான்.

எல்லா மனிதரும்
இறைவனின் சாயலே!

மனிதன் வடிவில்
மறைந்திருப்பவன்
இறைவனே.

அடையாளம்
காண்பவன்
அதிட்டசாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் சாயலாய்ப்
படைக்கப்பட்ட நீங்கள்
நானே இறைவன்
என்று
பிரகடனப்படுத்திவிடக்
கூடாது
என்பதற்காகத்தான்
உங்களுக்குள்ளே
மிருக உணர்வும்
உட் செலுத்தப்
பட்டிருக்கிறது.

காயீன்
ஆபேல் கதை
இதைத் தான்
காட்டுகிறது.

எனவே,
பாதி தெய்வம்
மீதி மிருகம்
இதுதான் நீங்கள்.

அபூர்வமான
படைப்பு, இல்லையா?

ஒளி நான்
உயிர் நான்
வழி நான்
வாழ்வு நான்.

என் வழியில்
இருட்டில்லை

என் பேச்சில்
இழுக்கில்லை

எந்தை என்னிலும்
நான் எந்தையிலும்
இருக்கின்றோம்.

என்னூடாகவே
எல்லாம் நடக்கும்.

என்னை மீறி
எதுவும் நடக்காது.

மலையில் கட்டிய
மாளிகை நான்.

உங்களுடையதே
இந்த உலகம்.

இதைப்
பங்கு போடுவது
பாவம்.

ஏழை பணக்காரன்
என்பதெல்லாம்
நீங்கள் போட்ட
எல்லைக் கோடுகள்

சூரியனும் நிலவும்
யாருக்கும்
சொந்தமில்லை.

காற்றையும்
மழையையும்
உங்கள் கைக்குள்
அடக்க முடியுமா?

பிறகு ஏன்
பெரும் ஆரவாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக் கிறிஸ்தவர்கள்
அற்புதமானவர்கள்

பாதி உணவைக்கூட
பகுத்துண்டு வாழ்ந்த
பண்பாட்டுக் காரர்

பழைய ஏற்பாடு
என்பதே
என் பாட்டிற்குரிய
பல்லவி தான்

புதிய ஏற்பாடு
நான் புனைந்த கீதம்

சரணங்கள்
எல்லாம்
அதனுள்ளே
சங்கமம்

கண்ணுக்குக் கண்
பல்லுக்குப் பல்
என்ற
கற்காலச் சட்டத்துக்கு
கல்லறை கட்டிவிட்டு,

பகைவனுக் கருளும்
மனிதப் பண்பாட்டைப்
படிப்பிக்க
வந்தவன் நான்.

இயற்கையே
எனது இயக்கம்.

எல்லா உயிர்களும்
எனது ஈர்ப்பிலேயே
இயங்குகின்றன.

உங்கள்
விஞ்ஞானஅறிவிற்கும்
ஓர் எல்லை உண்டு.

அந்த எல்லைக்கு
அப்பால் இருக்கும்
எனக்குப் பெயர்தான்
இறைவன்.

அனைத்து உயிர்களும்
என்னையே
அடையாளம்
காட்டுகின்றன.

உயிரற்றவையும்
என்னை
உறுதி செய்கின்றன.

எல்லா மதங்களிலும்
நான் இருக்கின்றேன்.

உண்மையே
என் உறைவிடம்.

தனிமையை
நான்
அதிகமாகவே
தழுவினேன்
அதில் தான்

தந்தையின் தரிசனம்
தாராளமாகக் கிடைத்தது.

ஆற்றோரங்களும்
அழகிய மலைச்சாரல்களும்
ஆனந்த லோகங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே தான்
என் அரியணையும்
இருந்தது.

பாடுகள்
என் மீது
தொடர்ந்து
படை யெடுத்த போது
பயந்தே போனேன்.

இதனால் தான்,
எந்தையே
இந்தப் பாத்திரம்
என்னை விட்டு
நீங்கினால் நல்லது
என்று
என் இதயம்
கூவியது.

என்றாலும்,
தந்தையின்
சித்தத்திற்கே
தாள் பணிந்தேன்.

பெத்தானி
எனக்குப் பிரியமான
இடந்தான்.
அந்தப் பெண்களில்
ஒருத்தி மரியாள்
பெருமைக்குரியவள்
மண்ணிற்
பிறந்தவளாயினும்
விண்ணையே

அவள் விழிகள்
நோக்கிக் கொண்டிருந்தன.

மற்றவள், மாத்தாளுக்கு
மண் வாசனை அதிகம்.

உலகக் கடலிலே
பயணஞ் செய்த
ஓட்டைப் படகு அது.

நான்
ஏன் பிறந்தேன்?
சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்க முடியாதவர்கள்

வாழ்க்கைச் சிறையில்
வைக்கப்பட்டவர்கள்

வியாதி என்னும்
தளையால்
விலங்கிடப்பட்டவர்கள்,

பொருள் வளம்
இல்லாததால்
பொட்டல் வெளியாய்ப்
பொரிந்து கிடப்பவர்கள்.

ஒழுக்கம் என்னும்
உண்மை அழகை
இழந்து விட்டு
பவுடர் பூச்சுக்களால்
தங்கள் பாவத்தை
மறைத்துக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபவர்கள்.
அறியாமை
என்னும் இருளில்
அடைபட்டு
எதையுமே அடையாளம்
காணமுடியாது
அவதிப்படுபவர்கள்

நீதி மறுக்கப்பட்டு
நடுத்தெருவில்
நின்று கொண்டிருப்-
பவர்கள்

காலம்
பல வழிகளில்
கைதியாக்கியுள்ள
இந்த
மானிடப் பூச்சிகளைக்
காப்பாற்றவே
நான்
அவதாரம் செய்தேன்.

எவரையும் நான்
எதிரியாக எண்ணவில்லை.
ஏரோதன் உட்பட.

மூப்பரும் குருக்களுமே
என்னைத் தங்கள்
முதல் எதிரி என
முழங்கினார்கள்.

நீண்ட காலமாக
இவர்கள் தாம்
என்னோடு
நிழல் யுத்தம்
செய்தவர்கள்

பன்னிரண்டு வயதிலேயே
இவர்களோடு
பகையைச்
சம்பாதித்துக் கொண்டவன்
நான்.

ஆலயத்தில்
இந்த
அரை வேக்காடுகளோடு
நான் மோதிய போது
போலித்தனத்தின்
பொக்கிஷம் இவர்கள்
என்பதைப்
புரிந்து கொண்டேன்

இவர்களையே
நான்
வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள் என்று
விமர்சனம்
செய்தேன்.

வெளி வேடம்
இவர்களுக்கு
வெகு பொருத்தம்.

இறைவனின் பிரதிநிதிகள்
என்ற இறுமாப்பு
இவர்களை
எங்கேயோ
கொண்டு போய்
நிறுத்தியுள்ளது.

சதுசேயரும்
பரிசேயரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சமூகத்திலும்
இருக்கவே இருக்கிறார்கள்.

தாழ்ச்சி
இவர்களைக் கண்டதும்
தலை தெறிக்க ஓடித்
தப்பித்துக் கொண்டது.

உள்ளத்தையும்
உதட்டையும்
ஒரு மைல் தூர
வித்தியாசத்தில்
இறைவன் இவர்களுக்கு
உருவாக்கிக்
கொடுத்திருக்கின்றான்.

வறுமை
இவர்களின்
வாசல் பக்கம் கூட
வரவில்லை.

ஜெரிக்கோ
காட்டுப் பாதையில்
என்ன நடந்தது.

அடிபட்டுக் கிடந்த
அந்த மனிதனை
ஆர் காப்பாற்றினான்.

சாமான்யமான
ஒரு சமாரித்தன்.

மற்றவர்களிடம்
மனிதத் தன்மையே
இருக்கவில்லை.

எருசலேம் ஆலயம்
என் இதயத்தில்
அப்படியே
ஒட்டப்பட்டிருக்கின்றது.

ஏன் தெரியுமா?

உயிர்ப் பலியின்
உச்சக் கட்டத்தை
அங்கு தான்
ஒரு சிலர்
நிறைவேற்றி வைத்தார்கள்

வேள்விக்காக
அங்கே
கொண்டு நிறுத்தப்பட்ட
வெள்ளாடுகள்
வெட்டி
வீழ்த்தப்பட்ட போது
அது
கோயிலாகவா
இருந்தது?

இரக்கத்தைத் தேடி
வந்த நான்
இரத்த
வெள்ளத்தில் அல்லவா
வீழ்ந்தெழுந்தேன்.

கடவுளின் பேரில்
இந்தக்
கசாப்புக் கடையை
நடத்திய
பெரிய மனிதர்கள் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு
என்னைப் பிடித்து
பிலாத்துவிடம்
ஒப்படைத்தார்கள்.

இவை
எல்லாவற்றுக்கும்
இந்தப் பரிசேயரும்
சதுசேயரும் தாம்
காரணம் என்று
சொல்லி விட முடியாது.

தவறு
தன் தடத்தை
எல்லாப் பக்கமும்
பதிக்கின்றது.

பாவம்
எந்தப் பக்கம் தான்
தன் பார்வையைச்
செலுத்தவில்லை.

சின்னப்பன்
ஆரம்பத்தில்
என்ன செய்தான்

அகுஸ்தீன் வாழ்க்கை
ஆருக்குத் தெரியாது.

என்னை
மூன்று முறை
மறுதலித்தவன்
அல்லவா
இந்த இராயப்பன்.

என்னுடைய
சிந்தனைகளையும்
வாழ்க்கை முறையையும்
இன்றையக் கிறிஸ்தவம்
பிரதிபலிக்கவில்லை
என்று நீங்கள்
சொல்வதிலும்
உண்மை இருக்கிறது.

ஏன் தெரியுமா?
என்னை
இதுவரை யாருமே
புரிந்து கொள்ளவில்லை
இதனால் தான்
எனது திருச்சபையில்
எத்தனையோ
மேடுகளும் பள்ளங்களும்.

பரவாயில்லை.
மனிதன் பலவீனன்
அதனால் தான்
அவன்
பாவங்களை
தான்
பொருட்படுத்துவதில்லை.

அனைத்துத் துன்பத்திற்கும்
காரணம்
அறியாமை

இதிலிருந்தே
எல்லாத் தீங்குகளும்
உற்பத்தியாகின்றன.

ஆதாம்
ஏவாளிடமிருந்தே
இது ஆரம்பமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவு
இல்லாததால் தானே
ஏவாள்
பாம்பிடம்
ஏமாறினாள்.

எனவே
அறியாமை
இருக்கும் வரை
அய்யோ பாவம்.

ஆனாலும்
உங்கள் ஈடேற்றம்
அருகிலேயே
இருக்கின்றது.

சுமை சுமப்பவர்களே
என்னிடம்
வாருங்கள் என்று
சும்மாவா
சொன்னேன்.

என் நுகம்
இனியது
எல்லாரும் வாருங்கள்.

இரட்சணியம்
என்பது
இருட்டினில்
இருக்கும் உங்களை
ஒளிக்குக்
கொண்டுவரும்
ஓர் உன்னத பணி.

பெத்தலேகம்
எனது
ஜனனத்தைப்
பிரகடனம்
செய்தது போல
எருசலேம்
எனது இறுதிமுடிவை
இனிதே
நிறைவேற்றியது.

எனது
பாலைவனப் பயணம்
பாடுகளுக்கான
ஒத்திகை
என்பதை அறிவேன்.

கல்வாரி
என் கண்முன்னே
எப்போதும் தெரிந்தது.

மரணமே
எனக்கு
மகிமை தந்தது.

மரணத்தில்
இருந்து வந்ததே
எனது மறுபிறப்பு.
(உயிர்ப்பு)

கேளுங்கள்
கிடைக்கும்
தேடுங்கள்
கண்ணில் தெரியும்
தட்டுங்கள்
தாள் திறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கான வழியே
ஏற்றது
அகன்ற வழியில்
ஆபத்திருக்கும்.

முதல் இடம் தேடி
முந்துபவர்கள்
கடைசி இடத்தில்
அமரும்
காலம் வரும்.

ஊசியின் காதூடாக
ஒட்டகம்
நுழையினும்
காசாசை
உள்ளவன்
கடவுளடி சேரான்.

புறாவும், பாம்பும்
புகட்டும்
பாடம் என்ன?

கபடமின்மை
விவேகம்
இவை இரண்டுமே
நீங்கள்
அணிய வேண்டிய
ஆபரணங்கள்.

பணக்காரன்
அள்ளித் தரும்
பணத்தை விட
ஓர் ஏழை தரும்
காணிக்கையே
உயர்ந்தது.

பற்று அற்ற
நிலை தானே
பரலோகம்
சேர்க்கும்.

இருட்டில் இருப்பதை
இறைவனே அறிவான்.

மற்றவனைத் திருத்துகின்ற
மனிதனே!
நிலைக்கண்ணாடி முன்
நின்று பார்.

நோன்பு
இருக்கும் போது
உன்னை
நோயாளி போல்
காட்டலாமா?

விரதம்
நீ இருப்பதற்கு
இது நல்ல
விளம்பரம் அல்லவா?

ஒரு கன்னத்தில்
உன்னை ஒருவன்
அறைந்தால்
மறு கன்னத்தை
அந்த மனிதனிடம் காட்டு.

இரண்டு உடைகள்
இருந்தால்
ஒன்றை
இல்லாதவனுக்குக்
கொடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் தான்
உனது
கை விளக்கு.

உடலைக் காக்கும்
ஒளி இதுவே.

உதவி நீ
ஒருவருக்குச்
செய்தால்
அதை
உலகமெலாம்
சொல்லாதே.

தீர்ப்பிடா தீர்கள்
ஏனெனில்
அதுவே உங்களைத்
திரும்பி வந்து
தாக்கும்.

முத்துக்களைப்
பன்றிகளின்
முன் போடலாமா?

நல்லவற்றை
நாய்களுக்குத்
தரலாமா?

கனிகளே
மரங்களை
அடையாளம் காட்டும்.

கண்ணில்
எண்ணெய்
விட்டுக்கொண்டு
கவனமாக இருங்கள்
ஓநாய்களும்
வேதம் ஓதலாம்

மற்றவர் பிழையை
மன்னிப்பீர்
இல்லையானால்
இறைவன்
உங்களை ஏற்கான்.

கடவுள்
வார்த்தைக்குக்
காது கொடுப்பவரே
எல்லாப் பேறும்
எய்தியவராவார்.

புதியதோடு
பழையதைப்
பொருத்தலாமோ?
இரண்டுமே
இதனால் இற்றுப்போம்.

சமுதாயத்தை
நெறிப்படுத்தவே
சட்டங்கள்.

ஆனால்,
சட்டங்களுக்காகவே
மக்கள் என்பது
பரிசேயர் சாத்திரம்.

புனிதமான நாளாம்
அதனால்
நல்லது கூடப்
புரியக் கூடாதென்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின்
போதனை.

நல்லது செய்யவும்
நாள் பார்க்கிறார்கள்.

பாவத்தில்
வாழ்பவனுக்குப்
பார்வை இல்லை.

தன்னை நேசிப்பவன்
தன்னை இழக்கிறான்.

தன்னை இழப்பவன்
தானாக உயர்கிறான்.

உள்ளத்தைக்
காட்டுவது
நீ உதிர்க்கும்
வார்த்தை.

என்னூடாகப் பேசுவது
இறைவனே.

சொல்வதெல்லாம்
அவரது சுருதியே.

திராட்சைக்
கொடி நான்
அதில்
திரண்டெழும்
கிளைகள் நீங்கள்.

பழம் கொடாக்
கிளையெல்லாம்
பாழாகும்.

என்னில் நீங்களும்
உங்களில் நானும்
இருந்தால் தான்
உங்கள் மனம்
உறுதியாகும்.

பணி செய்யப்
பழகு
இதுவே
தலைமைக்கான
தகுதி.

பாலைவனச் சோதனை
என்
வாழ்க்கையிலே
மிகப் பெரிய
பாடம்.

நன்மையைத்
தீமை
வெல்ல
முடியாதென்பதை
நன்கு
எடுத்துச் சொன்ன
நிகழ்வு அது.

தீய மரத்திலிருந்து
தீஞ்சுவைக் கனி
பிறப்பதுண்டா?

நல்ல மரம்
என்றும்
கெட்ட கனியை
நல்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசியுங்கள்
இந்த மலைகளே
விலகிச் செல்லும்.

இன்று — நாளை
பற்றி
ஏன் கவலை?

காகம் குருவிகளைக்
கவனிப்பவன்
உங்களையா
காக்காமல் விடுவான்.

எங்கே
உங்கள் செல்வமோ
அங்கே
உங்கள் இதயம்.

விளக்கு நீங்கள்
அதை
வீசும் காற்றில்
அணைய விடலாமா.

உப்பு நீங்கள்
அதன்
உறுசுவை போனால்
எதற்காகும்.

உதவி என்று
ஒருவன் வந்து
உன்னைக் கேட்டால்
அவன் உள்ளம்
நிறையச் செய்.

தீயதை விலக்கு
தூயதைப் போற்று.

ஒருவன்
இரு எசமானுக்கு
உட்பட்டு
நடக்க முடியுமா?

வேண்டும் போது
வேஷம் எதற்கு.

எது உயர்ந்தது.
இறைவனுக்கு
நீ தரும்
காணிக்கையா?
அல்லது
சகோதரனோடு
சமாதானமாக
வாழ்வதா?

உதவி
செய்தவனுக்குத் தான்
உதவுவதா?
இல்லை
உதவி செய்யாதவனுக்கு
உதவுவதே உயர்ந்தது.

கழிக்கப்பட்ட கல்லே
மூலைக்
கட்டடத்திற்கு உதவும்.

எளிய
மனத்தினர்க்கே
இறை அரசு.

அழுவோர்க்கே
ஆறுதல்.

பொறுத்தாரே
பூமி ஆள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியில் பற்றா
நெஞ்சம் நிறையும்.

இரங்கு நீ
இரங்குவார்
எல்லாரும்.

தூய மனத்திலேயே
கடவுள் துலங்குவார்.

சமாதானம்
செய்வோரே
சர்வேசுரன்
குமாரர்.

நீதிக்கான
போராட்டமா
நிச்சயம் கிடைக்கும்
நித்திய அரசு.

பரமபிதா அளித்த
பத்துக் கட்டளைகளும்
அன்பு எனும்
சக்திக்குள்
அடங்கி விடும்.

மன்னியும் தந்தையே
இந்த மனிதர்கள்
அறியாமற்
செய்கிறார்கள்......

இப்படி
மூன்றாணியில்
தொங்கிக்
கொண்டிருக்கும் போதே
முடிவாகச்
சொன்னேன்.

இது
எதைக் காட்டுகிறது
என் அன்பின்
ஆழத்தையல்லவா?

அன்பு தான்
அனைத்து
நோய்களுக்கும்
மருந்து.


அன்பு என்பது
தன்னை
அடுத்தவனுக்காக
அளிப்பதே.

அன்பிற்காகவே
நான்
அவதாரம் எடுத்தேன்.

அன்பே நான்
அன்பே
கிறிஸ்தவம்.

இதுவே
எனது தத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்து புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் உதித்த சூரியன்

இயேசு பாலனே!
இரவில் உதித்த
சூரியன் நீ!
உன வரவை உரைக்க
ஒரு நட்சத்திரம்
வானில்
உலா வந்தது
அந்த ஞானியர்
மூவரைத் தவிர
ஆருக்கும்
அதன் தரிசனம்
கிடைக்கவில்லை.

அந்தகச் சனங்கள்
அந்தகர் மட்டுமா?
செவிடரும் கூட......!

அந்தரத்தில் வாழும்
ஆயிழையர்
சுந்தரன்
உன் பிறப்பைச்
சொன்ன போது
விந்தைச் சனங்கள்
விழிக்கவேயில்லை.

சக்கரவர்த்தி
வம்சம் நீ......
சத்திரம் கூட
உன்னைத்
தள்ளி வைத்து விட்டது.

அதனால்......

மாட்டுக் கொட்டிலை
மாளிகையாக்கி
அதிலே
நீட்டி நிமிர்ந்து
நித்திரை செய்தாய்!
நிறம் வெளுத்த
நெற்றாள்கள்
உன்
நெஞ்சுக்கினிய
பஞ்சு மெத்தை

வாடைக்காற்று
வந்துன்னை
வருடி விடும்
வசந்தம்

காகங்களின் சுத்தல்
காதுக்கினிய
தாலாட்டு.

காலை நேரத்தில்
கண் விழித்த
பூக்களெல்லாம்
உன் காலடியில்
வீழ்வதற்காக
ஒற்றைக் காலில்
ஒன்றாக நின்றன.

கரிய இருட்டானாலும்
உன்னைக்
காண வேண்டுமென்ற
காதலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்துக் கொண்ட
வெள்ளை மலர்கள்
விடிந்தும்
உன் தரிசனம்
கிடைக்கவில்லையே
என்ற வேதனையால்
சோர்ந்து விட்டன.

தன்னை விட
தங்கமாக
ஜொலிப்பவன் நீ
என்ற காரணத்தால்
வெண்ணிலவுக்கு
வெட்கம்-
அதனால்
வெளிறிவிட்டது.

பெத்லேகம் ஊருக்கு
பிள்ளையுன் பெருமை
தெரியாதது
பெரிய விஷயமல்ல —

எல்லா ஊர்களும்
இப்படித்தான்
எந்த ஒரு
ஞானியும்
தன்னாட்டில்
ஏற்றுக்கொள்ளப்
படுவதில்லை.

இப்படி நீ
இயம்பிய
வார்த்தைகளுக்குப்
பெத்தலேகம் தான்

பொறுப்பேற்க
வேண்டும்.

என்றாலும்
உன்னை
இனம் கண்டு கொண்ட
பகுத்தறிவு
இல்லாத
மந்தைகள்
உன் பக்கம்
வந்து நின்றன.

மன்னவனே
உன் மாளிகையில்
கூடி நிற்கும்
அவை தாம்
உன்
குடி மக்களா?

நல்லாயன்
நானே என்று
பின்னாளில் நீ
பேசியதில்
பெரும் பொருள்
உண்டு.

இயேசு பாலனே
நீயும் ஒரு
கோபாலன் தான்.

எண்ணப்படி ஓடும்
மனித மாடுகளை
இழுத்துப் பிடித்து
இதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி எனக் காட்டும்
இடையன் நீ-

கார் இருட் போதில்
நீ இந்த உலகில்
காலடி எடுத்து
வைத்ததற்கு
ஒரு காரணம் உண்டு.

உலகின்
ஒளி நீதான்
என் பதை
உணர்த்த
இப்படியும்
ஒரு வழியா?

சூரியன் விழாவும்
சுதன் உன்
பிறப்பும்
ஒரே நாளில்
நிகழ்ந்தது
உண்மையிலேயே
பொருத்தம் தான்.

தரித்திரம்
உன் தம்பி.
இதனால் தானோ
தலை வைத்துப் படுக்கவும்
இடமில்லையெனத்
தலைவனே
நீ சொன்னாய்.

துறவைத்
தூய்மைப்படுத்துவது
இந்த வறுமை தான்

என் பதைத்
தூயவனே
உன் அவதாரம்
துல்லியமாக்கி விட்டது.

சத்தியத்தின்
சரியான வடிவம் நீ
இதனைச் சகியாத
ஏரோதுப் பொய்யன்கள்
உறைவாளை
உருவினார்கள்.

உலகம்
தனக்குள்ளே
சிரித்துக் கொண்டது.

கீழ்த்திசை ஞானியர்
கிறிஸ்து உன்
பிறப்பை
உணர்ந்தார்கள் என்றால்
அதன்
உட்பொருள்
இது தான்.

அறியாமைத் திரை
அகலும் வரை
ஆருமே
ஆண்டவரைத்
தரிசிக்க மாட்டார்கள்.

பெத்லேகமில்
எத்தனையோ பிள்ளைகள்
பிறந்திருப்பார்கள்-
அத்தனை பேரிலும்
நீ தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதப்பிறவி.
எப்படி?

தாரகை ஒன்று
தன்
தலையைக்
காட்டியதாலா!
வானத்திலிருந்து
வசந்த கானம்
வந்து தழுவியதாலா!

இல்லை.

நீ-
பிறப்பதற்கு முன்பே
நின்னைப் பற்றிச்
சொல்லப்பட்ட
சுவிசேஷ வார்த்தைகள்
ஒன்று கூட
பொய்க்கவில்லை.

முப்பத்து மூன்று
ஆண்டுகள்
போதுமென
மூன்று ஆணிகளில்
உன் வாழ்க்கையை
முடித்தவன் நீ!

அதற்குள்-

உன் வாழ்க்கை
அப்பப்பா......
உரோமைப் பேரரசின்
உரோமம் சிலிர்க்க
வைத்தவன் நீ!
சமய

உண்மைகளையெல்லாம்
தங்கள்
சட்டப்பைக்குள்
வைத்திருப்பதாக
எண்ணிக்கொள்ளும்
போலிக் குருக்களின்
பொய்ம்முகங்களை
வீதிக்குக் கொண்டுவந்து
வெளிச்சம் போட்டுக்
காட்டியவன் நீ-

வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள் என
அவர்களை
விளம்பரப் படுத்தியவனும்
நீ தான்.

உண்மை
உன்
நாடிநரம்பெல்லாம்
ஊற்றெடுத்துப்
பாய்கிறது

இதனால் தான்
உன்
அந்திம நேரத்தில்
உன்னைக்
காறித்துப்பி
கசையால் அடித்தும்
நீ அசையவில்லை.

இதைக் கண்டு
பேசும் சக்தியை
இழந்த பிலாத்து

கை கழுவியதும்
காணாமற் போய்விட்டான்

பித்தனாகிவிட்ட
பெரியகுரு
கத்திக் குழறித்
தன் அங்கியைக்
கண்டபடி
கிழித்தெறிந்தான்.

சத்தியத்தின்
சத்தி
சாதாரணமானதல்ல
என்பதை-
சர்வேசுரன் மகனே
சரியாக நிரூபித்தாய் நீ!

உத்தமனே
உன் புதுமைகளை
உலகம்
நம்ப மறுக்கலாம்
போதனைகள்
காற்றோடு
போய்விடலாம்
ஆனால்-

உன்
முப்பத்து மூன்று
ஆண்டுக்கால
வாழ்க்கை
இருக்கிறதே-
அது-

முடி மலையில்
ஏற்றப்பட்ட
முத்து மணிவிளக்கு
இந்த உலகம்
இருண்டு
விடாமல் இருப்பதற்கு
அந்த விளக்குத்தான்
காரணம்
சூரியன் என்பது
சுத்தப்பொய்
உதிக்கும் போதும்
அஸ்தமிக்கும் போதும்
உலகத்தில்
சரித்திரம் படைத்த
சாதனையாளன்
நீ ஒருவன் தான்.

குடிசையைக்
கோயிலாக்கியது போல
குற்றவாளிகளைத்
தண்டிக்கும்
கொடூரச் சிலுவையை
மீட்பின் சின்னமாக மேலே
உயர்த்தி
வைத்தவன் நீதான்.

மண்டை ஓடு
எனும்
பொருள் கொண்ட
மலைக்குக் கூட
மகிமை வந்தது
உன்னால் தான்

அந்தக் காலத்திலும்
ஆலயங்கள்
வியாபார நிலையங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்டபோது
உன் இளமை
கொதித்தது

சாட்டை எடுத்தாய்
கையில்
சமூக விரோதிகள்
ஓட்டம் பிடித்தார்கள்
ஒரு நொடியில்

அவன் பாவி
இவன் பாவி
என்று-
ஆரும்
ஆரையும் சொல்ல
அனுமதியாதவன் நீ
மரிய மதலேனாளை
மாக்கள் சிலர்
கற்பிழந்தவள் என்று
சொல்லெறிந்த பின்னால்
கல்லெறியக்
கையெடுத்த போது

குனிந்து நீ
நிலத்தில் ஏதோ
குறித்து விட்டு
நிமிர்ந்து பார்த்தாய்
அங்கே
நிழல்தானும் இல்லை.
பிரிவினைக் கோடு கீறி
பேதம் வளர்க்கும்
பித்தர்களிடம்
உன்னைப் போல்

உன் அயலானை நேசி
என்று
உரத்துச் சொன்னவன் நீ.

நல்ல சமாரித்தனை
நானிலத்திற்கு
அறிமுகப்படுத்தியவனும்
நீ தான்.

பாவிகளோடு
சமபந்தி போசனம்
செய்கின்றான்
என
உன்னைப் பார்த்து
பரிகசித்தார்கள்
பரிசேயர்கள்
பாவம் அவர்கள்'

முப்பது வயது வரை
முழுமையாக
அப்பா அம்மாவுக்கு
அடி பணிந்தவன் நீ

கட்டுப்பாடு
உன் குருதியில்
கலந்தது

இறுதி மூவாண்டு
காலத்தில்
எத்தனையோ
இடங்களுக்கு
சூறாவளி
சுற்றுப்பயணம்
செய்த போதும்
உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக்
குதிரைக்குக்
கடிவாளச்
சுருக்குப் போட்டவன் நீ

சந்தை
உலகத்தின்
சந்தடியிலிருந்து
முற்றாக ஒதுங்கி
மறிகடல் ஓரங்களிலும்
மலை அடி வாரங்களிலும்
தனித்திருந்து
உன்
தந்தையோடு
இனித்த கதைபேசி
இதயத்தை
இழந்தவனே !

நீ
சிலுவையில்
தொங்கிய
நேரம் அது !

ஈட்டியால்
ஒருவன்
உன்
இடது
விலாவைத்
திறந்தபோது
நீ
காட்டிய
கருணை
இருக்கிறதே
அதற்குக்
கடலைத்தானும்
உவமையாகக்
காட்டலாமா ?
உன் வாழ்க்கை

உருகி வழியும்
ஒரு
மெழுகுதிரி.
அரைக்க
அரைக்க
மணங்கமழும்
அழகிய
சந்தனக்கட்டை

இயேசுவே.........
இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்பு நீ
பிறந்த போது
இரவில் இருந்து
இருளைப்பிரித்து வைத்தாய்

ஆனால்!
இப்போது
பகலே
இருளாகி விட்டது

இறைமகனே
இருளைப் போக்க
எழுந்துவா......

ஒளி நீ
ஓடிவா......

நானிலத்திற்கு
உன்
ஞானஸ்நானம் தான்
தேவை

நாயகனே
நாங்கள் உன்னை
வரவேற்கிறோம்
வா......வா......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் தரும் மகிமை

குருதி நீரில்
அடிக்கடி
குளித்தாலும்
காய்ந்து கிடக்கும்
கற்பாறை, அது

'மண்டை' ஓடு
எனும் பெயர்
அதற்கு
மகா பொருத்தம்
அங்கே தான்-
சமூக விரோதிகளின்
சாவோலைகள்
கிழிக்கப்படுகின்றன

'பாறை'யை நோக்கி
பார்க்கப் பரிதாபம்;
ஒரு பரிசுத்தவாளனின்
இறுதிப் பயணம்
ஆரம்பமாகிறது

கத்தியால் கீறப்பட்ட
கனிந்த பழம் போல
குருதி அபிஷேகத்திற்குக்
குறைவில்லை

முத்து மகுடம்
புனைய வேண்டிய
தலையில்
முள் முடி-
முகத்தாமரை
இன்னும்
சிவக்கின்றது

கடைசி நேரத்தில்......
பழகிய ஒருவன்
காலை வாரிவிட
மற்றவர்கள்
காணாமற் போகின்றனர்

தண்ணிழல் சொரியும்
சோலை
தனி மரமாகின்றது
தங்கம்
வெள்ளிக் காசாகத்
தரம்
குறைக்கப்படுகின்றது

அன்பின்
அடையாளம் தான்
முத்தம்
ஆனால், அது
ஆளை விற்கும்
சின்னமாக
ஆக்கப்படுகின்றது

அரசன் ஒருவன்
அடிமையாக்கப்
படுகின்றான்

சிங்கம் ஒன்று
சிறு முயல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியிடம்
சிக்கித் தவிக்கின்றது.

ஊராளும்
உதவாக்கரைகள் முன்
அவர் ஓர்
உதைபந்து;
உருட்டி
விளையாடப்படுகின்றார்.

எருசலேம் நகருக்கு
யேசு எனும்
அந்த
மாமனிதன்
எழுந்தருளிய போது

வீதி எங்கும்
ஆடைகளை விரித்தும்
விருட்சங்களின்
இலை குழைகளை
வெட்டிப் போட்டும்
உற்சாகமாக
ஓசான்னா
பாடியோர் வாயில்
இன்று
ஒழிக! கோஷம்

இந்த மனிதர்கள்
இப்படித்தான்
நிறம் மாறுவதில்
நிபுணர்கள்
உணர்ச்சிக் கடலில்
ஓடும் தோணிகள்

அறிவு அவர்களை
ஆட்கொள்வதில்லை

இருளில் ஜனனம்
எடுப்பவர்கள்
எப்படி
ஒளியோடு
உறவாட முடியும்?

யேசுவுக்கு
இது நன்கு தெரியும்
அவர்
பேசவேயில்லை

வினாக்கணை தொடுத்த
பிலாத்துவிற்கு
அந்த இரவிலேயே
வியர்த்துக் கொட்டுகிறது
விலகிக் கொள்கிறான்

வியாழன்
விடைபெற
வெள்ளி பூக்கின்றது

அர்ப்பணம்
எனும் சொல்லுக்கு
அர்த்தம் புரிகின்றது

வேள்விக்கு ஒரு
வெள்ளாடு
தயாராகின்றது

ஒரு மெழுகுதிரி
உருகி வழிகின்றது

இனிய நறுமணம் தரும்
ஊதுபத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்து
சாம்பலாகின்றது

அழுக்குகளைக்
கழுவிக் கொண்டு
ஆறு ஓடுகின்றது

அடிதாங்கா உள்ளம்
இடி தாங்குகின்றது

தியாக மெனும்
யாகத் திருவுலா...
தெரு கண்டு
திளைக்கின்றது

சிலுவையில்
ஒரு சிவப்பு ரோஜா
மலரப் போகின்றது

ஆணி எனும்
முட்களிடையே
மலரப் போகும்
அதன் வாசத்தில்
உலகமே
மயங்கிப் போகும்

வீதிக் கரைகளை
உடைத்துக் கொண்டு
மக்கள் கடல்
பாய்கின்றது

கூம்பிய மலர்கள்
குனிந்த தாமரைகள்
தேம்பிய நெஞ்சங்கள்
தெருவெல்லாம் பெண்கள்

சொற்கள்
சக்தியின்றிச்
சோர்ந்து போக
அழுகையே
அற்புதமான
தொடர்புச்
சாதனமாகின்றது

அழும் பெண்களுக்கு
ஆறுதல் சொல்கிறார்
யேசு—
தொழும் வார்த்தைகள்
தொடும் நெஞ்சங்களை

பச்சை மரத்திற்கு
இப்படி யென்றால்
பட்ட மரத்தின் நிலை
எப்படியாகும்?

ஏன் அழுகின்றீர்கள்
எனக்காக?
நான் சொல்வேன்
நாளையச் சந்ததிக்காக
நன்றாக அழுங்கள்......

சிலுவைப் படுக்கையைச்
சுமந்துகொண்டு
யேசு
செல்கின்றார்

ஓரடி கூட
ஒழுங்காக
வைத்து நடக்கமுடிய
வில்லை
வேரடி மரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில்
வீழ்கின்றார் ... ...

கூலிப்படைக்கு
ஓரே
கொண்டாட்டம்

மரத்தால் வீழ்ந்தவனை
மிதிக்கும்
மாடாக
மாறுகின்றனர்

நான் நீ என்று
போட்டி
போட்டுக்கொண்டு
நன்மை அடைந்த
சனங்கள்
ஏன் என்று
கேட்கவில்லை
இதுதான் உலகம்!

இன்னல்
வரும்போது
எவரும்
எங்களுக்குப் பின்னால்
வரப் போவதில்லை.
இதை
யேசுவின் வாழ்க்கையே
எடுத்துக் காட்டுகின்றதா?

தட்டுத் தடுமாறி
எழுந்த யேசு
தான்
விட்ட
இடத்திலிருந்து
வெற்றிப் பயணத்தை
நடத்துகின்றார்

பலிக்களம்
கண்ணில்
படுகின்றது
பாத யாத்திரை
முடிவடைகின்றது

தோளை
அழுத்திய
சிலுவையில்
யேசுவைத்
தொங்கவைப்பதற்கான
பணிகள்
துரிதப்
படுத்தப்படுகின்றன.

உடலில்
ஒட்டியிருந்த ஆடை
உரிக்கப்படுகின்றது
இரத்தம்
ஓடிப்பாய்கின்றது.

இடையில்
ஒருதுண்டோடு
சிலுவைப்
படுக்கையில்
யேசு
கிடத்தப்படுகின்றார்.

இரண்டு கைகளும்
இழுத்து வைக்கப்பட்டு
இரும்பாணிகள்
ஏற்றப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் வலமாக
இரண்டு கள்வர்கள்;
இவர்களுக்கு நடுவே
யேசு.

இவர் தான்
யூதர்களின்
இராசா
இப்படியொரு
துண்டுப் பிரசுரம்
எழுதி
ஒட்டப்படுகின்றது.

சித்திரவதையின்
சிகரத்தில்
யேசு
இருந்தாலும்
நித்திய வார்த்தைகள்
அவர்
நெஞ்சிலிருந்து
வெளி வருகின்றன.

மேகத்திற்குத்
தாகம்;
தண்ணீர்
கேட்கின்றது
தரையைப்
பார்த்து!
கண்ணீர்
பெருக்கும்
காட்சி!

துயரத்தின்
உச்சக் கட்டத்தில்
தூயனவன்
உயரச் சிலுவையில்
இருந்து
ஓவென்று
அலறுகின்றார்

இறுதியாக—
' முடிந்தது
எல்லாம் ' என
முகம்
கவிழ்கின்றார்

இயற்கை ஒரு
குலுங்குக்
குலுங்குகின்றது,

காலமானவர்கள் கூட
கல்லறையைத்
திறந்து கொண்டு
இந்தக்
காட்சியைக்
காண வருகின்றனர்,

திரைச்சீலை
கிழிகின்றது
திகில் நாடகம்
அரங்கேறுகின்றது.

அன்று மாலை
அடக்கம் ......
நின்றவர்கள்
நிழல்போலத் தொடர்ந்த
சில நெஞ்சங்கள்.

சனி வாரம்
சர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிச்
சாகரத்தில்
மூழ்கின்றது
பூமித்தாயின்
மடியில்
யேசுவுக்கு
பூரண ஒய்வு.

ஓடி வருகின்றது
ஒளி ஞாயிறு
உன்னதமான
மனிதன் ஒருவன்
தேவனாக
உயிர்த்தெழுந்ததைக்
காண்பதற்காக
ஆம் ......
அஸ்தமனத்தில்
ஓர் உதயம் — அது
ஆருக்குப் புரியும்?

கல்லறைக்
காவலர்களின்
கண்கள்
கூசுகின்றன.

எதிரே தோன்றிய
யேசுவின்
விஸ்வரூபம்
ஏவலரை
இருட்டிற்குள்
தள்ளுகிறது
எதுவும் புரியவில்லை
எழுந்து
ஓடுகிறார்கள்.

கூட்டம்
கூடுகிறார்கள்
குருக்கள் :
நாட்டிற்கு
உண்மையை மறைக்கும்
நரி வேலை
நடத்தப்படுகின்றது.

பொய்க்கு
அலங்காரம் புனைந்து
வீதியிலே
உலவ விடுகிறார்கள்
விசரர்கள்.

செய்தி அறிந்த
சீடர் சிலர்
கை கால் பதற
கல்லறைக்கு
விரைகின்றார்கள்.

ஆனாலும்
அவர்கள்
ஊன மனத்தினர்
ஒளி
ஒதுங்குகின்றது.

ஆரணங்கொருத்தி
அசைக்கமுடியாத
நம்பிக்கையின்
அடையாளம்
அன்பின்
ஆழமும்
அவள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணனைக்
காணவில்லையெனப்
புலம்புகின்றாள்.

யேசுவின்
விஸ்வரூபம்
இந்த ஏழைப்பெண்ணுக்கு
எளிதில்
தெரிகின்றது.

விமானத்தில் ஏறி
விண்ணைக் கிழித்தாலும்
எட்ட முடியாத

இறைவனின்
வடிவம்
இந்தப்
பெண்ணுக்கு
எப்படிக்
கிடைத்தது ?
அதற்குப் பெயர்தான்
அன்பு —

அகிலத்தையே
இயக்கும்
அற்புத சக்தி அது
அல்லேலூயா.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசு புகழ் பேசு

இராகம் : சங்கராபரணம். தாளம் : ஆதி.

பல்லவி

வாழ்க யேசு வாழ்கவே
வையகம் எங்கும் வாழ்கவே
திராட்சைக் கொடியின் திருவிருந்தே
இரட்சகரே யேசுவே.

சரணம்

யேசு எங்கள் இறைவன் பெயரை
பேசு மனமே நீ
வீசு அவனின் புகழைச் சொல்லி
விளங்கு மனமே நீ

(வாழ்க யேசு)

வாசமலரே வான நிலவே
வாழ்த்திப் பாடுக
ஆசைத்தேவன் அமலன் கிறிஸ்து
அனைத்தும் பாடுக.

(வாழ்க யேசு)

எங்கள் யேசு இறைவன் மைந்தன்
எங்கும் சொல்லுக
பொங்கும் அவனின் அருளில்
இந்தப் பூமி நிறைஞுக.

(வாழ்க யேசு)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org